# கோவையில் மருத்துவ ஆராய்ச்சி பயிற்சி மையம்

## கே.டி.வி.ஆர் குழுமம் துவக்குகிறது

கோவை, ஜூலை 29-

கோவை கே.டி.வி.ஆர் குழுமத்தின் விஜய தீபா நிறுவனமும், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலையின் அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனமான கிளினி மைட்ஸும் இணைந்து கோவையில் மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி மையத்தை துவக்க உள்ளன.

கோவை வேலாண்டிபாளையம் மாதக்கோணார் வீதியில் உள்ள கே.டி.வி.ஆர் கார்டனில் ஆகஸ்ட் 14ம் தேதி துவங்கப்படும் இம்மையம் குறித்து குழுமத்தின் நிர்வாக இயக்குனர்கள் டாக்டர் வி.ஜெனார்த்தனம், டாக்டர் எஸ். விஜய்வெங்கட்ராமன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மருந்து தயாரிப்பு மற்றும் உயிர்த் தொழில்நுட்பத் துறை தற்போது வளர்ச்சி பெற்று வருகிறது. நம் நாட்டைப் பொறுத்தவரை இத்துறையின் வல்லுநர்கள் மிகவும் குறைவு. இப்பயிற்சி மையத்தின் மூலம் இந்தத் துறையில் வளர்ச்சி பெற முடியும். 2014ம் ஆண்டு 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சியாளர்களை எங்கள் பயிற்சி மையம் உருவாக்கும். மருத்துவம், டென்டல், ஹோமியோபதி, பார்மஸி, பயோடெக்னாலஜி, பயோ கெமிஸ்டரி, மைக்ரோபயாளஜி மற்றும் அறிவியலை பாடமாக பயின்றவர்கள் பயிற்சி வகுப்பில் சேரலாம். 3 மாதம் முதல் ஓராண்டு வரை பயிற்சி வகுப்புகள் நடைபெறும். பயிற்சியில் சேர 94422-25311 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்தனர்.